World Christian Fellowship

www.wcflondon.com

wcflondon@gmail.com

# யோனாவின் புத்தகம்

**பெயரின் பொருள்**: *புறா*

**எழுதப்பட்ட காலம்**: *800-763 கி.மு*

*II இராஜாக்கள் 14:23-27,* **யூதாவின் ராஜாவாகிய யோவாசின்
குமாரன் அமத்சியாவின் பதினைந்தாம் வருஷத்தில்,
இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசின் குமாரன்
யெரொபெயாம் ராஜாவாகி சமாரியாவில் நாற்பத்தொரு
வருஷம் அரசாண்டு, 24 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்
பானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்
பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின்
பாவங்கள் ஒன்றையும் அவன் விட்டு விலகவில்லை.
25 காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின்
குமாரன் யோனா என்னும் தம்முடைய
ஊழியக்காரனைக்கொண்டு இஸ்ரவேலின்
தேவனாகிய கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே,
அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின்
கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச்
சேர்த்துக்கொண்டான். 26 இஸ்ரவேலின் உபத்திரவம் மிகவும்
கொடிது என்றும், அடைபட்டவனுமில்லை,
விடுபட்டவனுமில்லை, இஸ்ரவேலுக்கு ஒத்தாசை**

***செய்கிறவனுமில்லை என்றும் கர்த்தர் பார்த்தார். [27]இஸ்ரவேலின் பேரை வானத்தின் கீழிருந்து குலைத்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லாமல், யோவாசின் குமாரனாகிய யெரொபெயாமின் கையால் அவர்களை ரட்சித்தார்.***

*இது இஸ்ரவேலின் ராஜா யெரொபெயாம் II-ன் காலம். யெரொபெயாம் கி.மு 793 முதல் கி.மு 753 வரை அரசாண்டார். கடந்த சில அரசர்களை விட இவரது ஆட்சியில் ராணுவம் வலிமையாக இருந்தது என்பது 25-ஆம் வசனத்தில் விளங்குகிறது. அசீரியா வலிமையாக வளர ஆரம்பித்து கொண்டிருந்தது; அதே சமயம் நினிவே உலகில் மிகப்பெரும் நகரமாக விளங்கியது.*

***இந்த புத்தகம் 4 அதிகாரங்களும் 48 வசனங்களும் கொண்டது.***

## *வரலாற்று பின்னணி*

*யெரொபெயாம் II-ன் அரசாட்சி நலமானதாக இருந்தது (II இராஜா 14:25-28; ஆமோஸ் 6:14). வடக்கு பகுதியில் உள்ள உரார்து ராஜ்ஜியத்தின் மூலம் அசீரியா கடும் போர்களை சந்தித்தது. ஆகவே சீரியா இஸ்ரவேலின் மேல் படை எடுப்பது சுலபமாய் அமைந்தது*

*அந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அசீரியா உலகின் மிகப்பெரும் ராணுவ சக்தியாக உருவெடுத்திருந்தது. ஆனாலும் இந்த புத்தகம் எழுதுவதற்கு அது ஒரு தடையாக இருக்கவில்லை.*


*தீக்ரிஸ் நதிக்கரைக்கு சுமார் 550 மைல்கள் கிழக்கே இஸ்ரவேல்*




*தேசத்தின் வடக்கே அமைந்துள்ள ஒரு மகா நகரம் நினிவே (லூக்கா 11:30-32). அதின் கோட்டை எவராலும் கைப்பற்ற முடியாதபடி, வெளிச்சுவர் 50 அடி மற்றும் உள்சுவர் 100 அடி உயரமுமாய் சுமார் 90 மைல்கள் தூரம் சுற்றளவு கொண்டது. நிம்ரோத்தின் குடிகள் சுமார் 120,000 பேரால் கட்டப்பட்ட ஒரு பூந்தோட்ட நகரம்; உலகின் அதிசயங்களில் ஒன்றாகவும் விளங்கிய நகரம்.*


*அசீரியர்கள் தங்கள் உள்நாட்டு பூசல்கள் காரணமாக சில காலம் வலுவிழந்திருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி*

*யெரொபெயாம் ராஜா தனது எல்லையை விரிவாக்கியிருந்தார். இஸ்ரவேலர்கள் பெருமைபாராட்டி முரட்டாட்டமானத்தால், பேராசையும் அநீதியும் பெருகி முறைசார் மதமும் (formal religion) நிறுவப்பட்டது.*




**வேதாகமத்தின் நம்பகத்தன்மையை சந்தேகிப்பது சபைகளின் பிழை.**

*சிறு வயது முதல் ஞாயிறு பள்ளியில் யோனா மீனின் வயிற்றிலிருந்து கர்த்தரிடத்தில் ஜெபிப்பதுபோல் நமக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆகையால் யோனா உயிரோடு இருந்தாரா இல்லை மரித்தாரா? என்று கேட்கப்படும்போது நாமும் தடுமாறுகிறோம்.*



*இந்த தீர்க்கதரிசனத்தை, "யோன எழுதிய சுவிசேஷம்"* என்றும் நாம் கூறலாம். இதை இயேசு, தன்னையும் தனது ஊழியத்தையும், குறிப்பாக தனது மரணத்தையும் மரித்தோரிலிருந்து அவருடைய உயித்தெழுதலையும் பிரத்தியேகமாக குறிக்கும் அடிப்படை தீர்க்கதரிசனமாக மேற்கோள் காட்டுகிறார். கர்த்தர் நமக்கு கற்றுத்தரும் புதிய ஏற்பாட்டு பாடங்களை புரிந்துகொள்வதற்கு யோனா மிக மிக முக்கியமானவர்.

இயேசு தனது இரண்டாம் வருகையை குறித்து யோனாவின் மூலம் வெளிப்படுத்துகிறார்!

***மத்தேயு 12:39-41, அவர்களுக்குப் அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. [40] யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். [41] யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்.***

***மத்தேயு 16:4, இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, அவர்களைவிட்டுப் புறப்பட்டுப்போனார்.***

## சுருக்கமான வருணனை:

***யோன தனது ஊழியத்தை விட்டு ஓடுகிறார் (அதி 1 – 2)***

- *யோனாவின் அழைப்பும் ஓட்டமும் (1:1–3)*
- *கப்பற்காரர் தங்கள் தேவர்களை நோக்கி வேண்டுதல்செய்கிறார்கள் (1:4–6)*
- *யோனாவின் கீழ்படியாமை வெளிப்படுதல் (1:7–10)*

- *யோனாவின் தண்டனையும் விடுதலையும் (1:11—2:1; 2:10)*
- *யோனாவின் ஜெபமும் நன்றி செலுத்துதலும் (2:2–9)*

## ***யோனா ஏன் தயங்கினார்?***

*யோனா சமாதானமாய் இருந்த ஒரு தீர்க்கதரிசி அல்ல. இஸ்ரவேலரை நெருங்கி வரும் யுத்தத்தை அவர் அறிந்திருந்தார். தனது தேசம் கர்த்தருக்கு கீழ்படியாமலிருப்பதை கண்கூடாக யோனா கண்டார். பலர் பாகாலை சேரத்தொடங்கினர். நாம் ஓசியாவின் தீர்க்கதரிசனத்தை குறித்து சற்று பின்னால் பார்ப்போம்; ஓசியா மற்றும் யோவேலின் தீர்க்கதரிசனமும் கிட்டத்தட்ட இந்த காலகட்டத்தை குறித்தே உரைக்கப்பட்டன. அவை இஸ்ரவேல் எவ்வாறு கர்த்தரிடமிருந்து விலகிப்போவார்கள் என்றே உரைக்கின்றன.*

*இஸ்ரவேல் தனது எண்ணிக்கையில் கணிசமாக குறைந்திருந்தனர்; தமஸ்கு-வின் ராஜா வடக்கு பகுதியின் உள்ளாட்சி கலவரங்களை கட்டுப்படுத்தினான் (2 இராஜா13:7). கர்த்தர் தமது பூரண ஞானத்தினால் யெரொபெயாமை ஆசீர்வதித்ததிநிமித்தம் (2 இராஜா 14:26-27) அவன் தமஸ்குவின் மீதான அசீரியரின் வெற்றியை பயன்படுத்திக்கொண்டான். ஆனால் யோனாவோ ராஜாவின் துன்மார்க்கமான வழிகளுக்காக இஸ்ரவேலர் கர்த்தரால் தண்டிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். கர்த்தரோ அவர்களை இன்னும் அதிகமாய் ஆசீர்வதித்தார்.*

அசீரியரின் தமஸ்கு படையெடுப்பிற்கு (797 கி.மு) பிறகு, தமஸ்கு ராஜா இழந்த பகுதிகளை இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் கைப்பற்றினார் (2 இராஜா 13:25). அசீரியா உள்நாட்டு பிரச்சனைகளால் கலவரப்பட்டபடியால், யெரொபெயாம் II-ஆல் இஸ்ரவேலை முழுமையாக மீட்க முடிந்தது. ஆயினும் அந்த காலகட்டங்களில், அசீரியா இஸ்ரவேலின் வடக்கே பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது.

கர்த்தரின் தீர்க்கதரிசிகள் 797 கி.மு நடந்த இந்த காரியங்களைக்குறித்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு தீர்கதரிசனம் உரைத்தார்கள். இஸ்ரவேலின் ராஜா தமஸ்குவில் பெறப்போகும் வெற்றிகளை குறித்து எலிசா தீர்கதரிசனம் உரைத்தார் (2 இராஜா 13:14-19). சில ஆண்டுகளுக்கு பிறகு யோனா இஸ்ரவேலின் மீட்பை குறித்து தீர்க்கமாக உரைத்ததை யெரொபெயாம் II நிறைவேற்றினார் (2 இராஜா 14:25). இஸ்ரவேல் வெற்றிகண்ட கொஞ்ச நாட்களிலேயே தங்களின் வலிமையை குறித்து பெருமைபாராட்ட தொடங்கினர்.

இஸ்ரவேல் வெளிநாட்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கபட்டபடியால் கர்த்தரின் விருப்ப அந்தஸ்தை தான் பெற்றதாக திருப்தியடைந்தனர். தன்னை தவிர அனைத்து தேசங்களும் கர்த்தரின் நாளின் சோதனையையும் தண்டனையையும் பெறுவார்கள் என்றும் தாங்களோ கர்த்தரின் மகிமையில் இளைப்பாறுவோம் என்றும் இஸ்ரவேலர் எதிர்பார்த்தார்கள்.

இந்த காலகட்டத்தில் தான் ஆண்டவரின் வார்த்தை ஆமோஸ் மற்றும் ஓசியா மூலமாக வலிமையான இஸ்ரவேல் ஜனங்களுக்கு “இஸ்ரவேல் இனியும்

*பொருத்துக்கொள்ளப்பட மாட்டாது" (ஆமோஸ் 7:8 8:2); அவர்கள் தமஸ்குவையும் தாண்டி (ஆமோஸ் 5:27) அதாவது அசீரியாவிர்க்கு தஞ்சமாய் போவார்கள் (ஓசியா 9:3; 10:6; 11:5) என்று உரைக்கப்பட்டது. இதே காலத்தில் ஆண்டவர் யோனாவை நினிவேவிற்கு நேரிடப்போகும் தேவ ஆக்கினையை குறித்து எச்சரிக்கும்படி அனுப்பினார்.*

*இஸ்ரவேலின் துன்மார்க்கமான ராஜாவை ஆண்டவர் மேலும் மேலும் ஆசீர்வதித்தபடியே ஜனங்கள் மேல் இரக்கத்தையே காட்டுவார் என்று யோனா நினைத்தார்.*

***யோனா தயக்கத்தோடு தனது ஊழியத்தை நிறைவேற்றுகிறார் (அதி 3 – 4)***

- *யோனாவின் புதிய ஊழியமும் கீழ்படிதலும் (3:1-4)*
- *நினிவே பட்டனத்தார் பயந்து கர்த்தரிடத்தில் மன்றாடுதல் (3:5–9)*
- *நினிவே பட்டனத்தார் மன்னிக்கப்படுதல் (3:10 - 4:4)*
- *யோனாவின் மீட்பும் கடிந்துகொள்ளுதலும் (4:5–11)*

***இன்றைய வாழ்வில் நமக்கு....***

1. **சுயநலம்**

*யோனா ஆண்டவரைவிட தன்னுடைய மரியாதையை குறித்து கவனமாயிருந்தார். நினிவே பட்டனத்தார் மனந்திரும்புதலின் மூலம் மீட்கப்படுவதை விட அந்த நகரம் அழிக்கப்படும் என்கிற தனது தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டும் என்று விரும்பினார்.*

*உங்களுக்கு பிடிக்காதவர்கள் பிரச்சனைகளை சந்திக்கும்போது நீங்கள் மகிழ்கிறதில்லையா?*

*உங்களுக்கு எதிராக தவறான காரியங்களை செய்தவர்கள் கஷ்டப்படும்போது அதில் மகிழ்வதில்லையா?*

*உங்களுக்கு பிடிக்காதவர்களின் அழிவுக்காக நீங்கள் காத்திருப்பதில்லையா?*

***பிலிப்பியர் 2:3-4, ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மை யினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையான வர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவை களையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.***

*நாம் ஆண்டவரிடத்தில் மனந்திரும்பி அவரின் மன்னிப்புக்காகவும், தொலைந்த ஆடுகளை தேடும்படியான அவருடைய அதே சிந்தை நம்முடைய இருதயத்திலும் நிரப்பப்படவும் அவரிடம் ஜெபிப்போம்.*

2. **கீழ்படிதல்**

*ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிய எச்சரிக்கையாய் இருக்கிறீர்களா?*

*நூறு சதவீதம்? 100%*

*பாதி கீழ்படிதல் அல்ல!!*

***I சாமுவேல் 15:22, அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.***

***ஓசியா 6:6, பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்.***

***அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிவீர்களா?***

*சுவிசேஷத்தை பிரசங்கித்து சீஷர்களை உருவாக்குங்கள் என்று இயேசு கூறியிருக்கிறார்!*

***அவருடைய இந்த மகத்தான ஊழியத்திற்கு கீழ்படிவீர்களா?***